13 பாடம்

# ஒரு வழியாகத் தப்புவித்தல்?

*உணவு தயாரித்துக்கொண்டிருந்த மேரி சத்தம் கேட்டு திரும்பினார். ஏஞ்சல் முட்டைகளைக் கீழேபோட்டு உடைத்திருந்தாள். மிகுந்த பயத் துடனும் வேதனையுடனும்,''அம்மா, நான் வேண்டுமென்றே உடைக்கவில்லை; கை தவறிவிட்டது'' என்றாள். அம்மா கனிவுடன் அவளைப் பார்த்தார்கள். தரையைச் சுத்தம் செய்தபடியே அடைக்கலப்பட்டணம் பற்றிக் கூற ஆரம்பித்தார்கள். ஏஞ்சலுக்குப் புரிய வைப்பதற்காகக் கற்பனை நயத்துடன் கூற ஆரம்பித்தார்கள். நாமும் கேட்போமா?*

ஒரு மனிதன் மூச்சிரைக்க வேகவேகமாக ஓடிக்கொண் டிருந்தான். அவனது மனது படபட வென்று அடித்துக் கொண்டது. ஓடும்போது அடிக்கடி பின்னால் திரும்பிப் பார்த்துக்கொண்டான். அவ்வாறு பார்த்தவாறே ஓடிக்கொண்டிருந்தான்.



தன்னை யாரும் பார்த்து விட்டார்களே தன்னை யாரும் பார்த்துவிடக் கூடாதே என்று பதறினவனாக ஓடிக்கொண் டிருந்தான். ஓடுவது சிரமமா யிருந்தது. கால்கள் வலிக்க ஆரம்பித்தன. இதயமே நின்று விடும்போல இருந்தது. ஆனால், ஓடாமல் நின்றால் அவன் நிலை கஷ்டமாகிவிடும். கண்டிப்பாக அவன் ஓடியே ஆகவேண்டும்.

ஒரு மரத்தின் பின்னே ஒரு சில நிமிடங்கள் நின்று தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண் டான். அந்த வேளையில் அடடா! சற்று நேரத்திற்கு முன் எப்படி இருந்தேன்; அதற்குள் இப்படிச் சூழ்நிலை மாறிவிட்டதே என நடந்த சம்பவத்தையே நினைத்துப் பார்த்தான்.

அவனும் அவனது பக்கத்து வீட்டுக்காரனுமாகத் தான் மரம்வெட்டிக்கொண் டிருந்தார்கள். நன்றாகப் பேசி, சிரித்தவாறே இருவரும் மரத்தைக் வெட்டிக்

## மனன வசனம்

**தேவனே, என்னைக் காப்பாற்றும், உம்மை நம்பியிருக்கிறேன்.**

**சங்கீதம் 16:1.**

கொண்டிருந்தார்கள். எதிர்பாராமல், திடீரெனக் கோடாரியிலுள்ள பிடி கழன்றுவிட்டது. எனவே, கோடரியின் இரும்புப் பகுதி பக்கத்து வீட்டுக்காரனின் முகத்தின் மேலேயே விழுந்துவிட்டது. இரும்புப் பகுதி முகத்தின்மேல் விழுந்த மாத்திரத்திலேயே பக்கத்து வீட்டுக்காரன் செத்துப்போய் விட்டான்.

கொல்லப்பட்டவனைப் பார்த்துக் கொன்றவன் பதறினான். அவனுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

வேண்டுமென்றே அவன் கொல்லவில்லை. மரம் வெட்டும்போது கோடரியின் பிடி கழன்றுவிட்டதால்தான் இந்த நிலை. என்ன சொன்னாலும் மற்றவர்கள் நம்பமாட்டார்கள். ஏனெனில் கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்றுதான் நாட்டில் சட்டம் இருந்தது. எனவே உயிருக்குப் பதிலாக உயிரை எடுத்துவிடுவார்கள்; எனவே, தன் உயிரைக் காப்பற்றிக்கொள்ள அடைக்கலப் பட்டணம் நோக்கி வேகமாக ஓடினான். வழிநெடுகிலும் அடைக்கலப் பட்டணம் எனும் கைகாட்டியைப் பார்த்து அப்பட்டணம் நோக்கி ஓடினாள்.

இப்படி அறியாமல் தெரியாமல் ஏதேனும் பழிக்கு ஆளாகி விடுபவர்கள் தப்பித்துக்கொள்ள வேண்டும் என்றே தேவன் விரும்பினார். அதற்காகவே மோசேயின் மூலமாக தேவன் இவ்வாறு அடைக்கலப்பட்டணம் என்ற ஓர் ஏற்பாட்டைச் செய்து வைத்திருந்தார். 6 அடைக்கலப் பட்டணங்கள் இருந்தன. அங்கே அவன் சென்று நிகழ்ந்ததைக் கூறவேண்டும். பிரதான



## செய்தி

**நம்மேல் அன்பாக இருக்கிற, நமக்கு அடைக்கலம் தருகிற தேவனை நாம் தொழுகிறோம்.**

ஆசாரியன் அதை விசாரிப்பான்; தவறு செய்யாதவன் இவ்வாறு தப்பித்துக்கொள்ள தேவன் நல்ல ஓர் ஏற்பாட்டைச் செய்திருந்தார்.

அந்த மனிதன் அந்த அடைக்கலப் பட்டணத்தை நோக்கித்தான் ஓடிக்கொண்டிருந்தான். கடைசியாக, ஒரு வழியாக அந்த அடைக்கலப் பட்டணத்திற்குள் ஓடி அடைக்கலமும் பெற்றுக் கொண்டான்.

இப்போது அம்மா ஏஞ்சலிடம், "ஏஞ்சல், நம் பாவத்தைச் சொல்லி நம்மைச் சாத்தான் பயமுறுத்தும்போது, நமக்கு எதிராக வரும் எந்தத் துன்பத்திற்கும் நீங்க இப்போதுகூட ஓர் அடைக்கலப்பட்டணம் இருக்கிறது என்றார்கள்."

என் பிரியமே! அந்த அடைக்கலப்பட்டணம் நம் இரட்சகர் இயேசுவே. அவருக்குள் நாம் சுகமாய் இருக்கலாம். இருப்போமா?

**செய்முறை:** *பாவத்தின் விளைவால்தான் துன்பங்களும் சோதனைகளும் நம்மைச் சூழ்ந்திருக்கின்றன. ஜெபத்தின்மூலமாகவும் வேதவாசிப்பின் மூலமாகவும் நாம் இயேசுவை அறியலாம். நம் இரட்சகர் இயேசுவின் மூலம் நித்தியவாழ்வைப் பெறக்கூடும். இந்த வனாந்தர வாழ்வுப் பாதையிலிருந்து இயேசுவிடம் சென்று பாதுகாப்பாகவாழ உதவும் வழியைக் கண்டுபிடி. அவ்வழியை வண்ணமிடு.*




**புதிர் 13**